ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2399/38 - 2024 අගෝස්තු මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.08.29

*2399/38 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 76அ ஆம் பிரிவு மற்றும் வாக்காளர் பதிவுசெய்தல் சட்டம்

*24அ ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்திய) சட்டத்தின் திருத்தப்பட்ட உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 89 ஆம் உறுப்புரையில், "இளைஞர் என்னும் பதத்தின் பொருள்கோடலில்" 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர் பதிவுசெய்தல் சட்டத்தின் பிரகாரம், செயற்பாட்டிலுள்ள வாக்காளர் பட்டியலின் மீள்திருத்தங்கள் ஆரம்பிக்கப்படும் வருடத்தில் யூன் மாதம் 01 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாத என்னும் வாக்கியத்திற்குப் பதிலாக 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க வாக்காளர் பதிவுசெய்தல் (திருத்திய) சட்டத்தின் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர் பதிவுசெய்தல் சட்டத்தின் 20அ(1)(அ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாத (அதாவது 2006 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்த) என்னும் வாக்கியத்தை உபயோகித்து, இளைஞர் என்னும் பொருள்கோடலில் மாற்றம் செய்யப்படல் வேண்டுமென உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 76அ, 89 ஆம் பிரிவு மற்றும் 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க வாக்காளர் பதிவுசெய்தல் (திருத்திய) சட்டத்தின் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர் பதிவுசெய்தல் சட்டத்தின் 24அ ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைவாக, தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் இத்தால் அறிவித்துக்கொள்கின்றோம்.*

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சீ. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. ஷண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

*தேர்தல்கள் செயலகம்,*
*சரண மாவத்தை,*
*இராஜகிரிய,*
*2024, ஒகத்து 29.*

EOG *08 - 0337*